# பொது முடக்க அறிவிப்பை மீளப் பெறுங்கள்!



## இலங்கை சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 13

எதிர்வரும் 20 ஆம் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொது முடக்கத்துக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பை மீளப் பெறுமாறு இலங்கை சிவசேனையின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குபேரர்களுக்குக் குடிசை மக்களின் துன்பம் தெரியாது. பொது முடக்கத்துக்கு அழைத்த அரசியல்வாதிகளுள் பலர் குபேரர்கள். வசதிகளின் மடியில் வாழ்பவர்கள். சொகுசுகளின் சொப்பனத்தில் மகிழ்பவர்கள். உதவியாளர்களின் ஒத்துழைப்பில் திளைப்பவர்கள் பலர். மக்களின் வரிப்பணத்தை உறிஞ்சுவோர் சிலர்.

இன்று உழைத்தால் நாளைய கஞ்சி. இன்றைய சம்பளம் நாளைய தீபாவளிக்கு. ஈழத் தமிழர் தாயகத்தின் உழைக்கும் தொழிலாளர் 3 இலட்சம் தமிழரின் நிலை.

10,000ரூபா தொடக்கம் 20,000 ரூபா வரை நாளாந்தம் பணம் புரள உழைப்போர் சிறு வணிகர்கள். அப் புரளலில் தேறும் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ரூபாவுக்காக நாள் முழுதும் வாடிக்கையாளருக்காகக் காத்திருக்கின்றார்கள். இத் தகைய சிறு வணிகர்களின் தொகை 3 இலட்சம் ஈழத் தமிழர் தாயகத்தில்.

2➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 26 வெள்ளிக்கிழமை 13.10.2023 கதிர் 92

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்



## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இராஜினாமாச் செய்யவேண்டும்!

### இரா. சாணக்கியன் எம்.பி. கருத்து

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் ஏதாவது ஒரு நன்மை செய்வதாக இருந்தால் தன்னுடைய அமைச்சை இராஜினாமாச் செய்துவிட்டு, வெறுமனே ஒரு நாடாளுமன்ற உறுப்பினாக இருப்பதே சிறந்தது, என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இன்று மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் இந்திய இழுவைப் படகுகள் விடயம் குறித்து பிரதமர் மற்றும் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் நேரெதிர்க் கருத்துகள் தொடர்பாக ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய இழுவைப் படகுகளுக்கு 2➤

## புலிகளின் ஆயுதங்களையும் தங்கத்தையும் தேடிய அகழ்வுப் பணி தோல்வியடைந்தது



வவுனியா, புதியகோவில் குளத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் தங்கம் என்பன காணப்படுவதாகச் சந்தேகிக்கப்பட்ட பல இடங்களில் நேற்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

வவுனியா நீதவான் வசீம் அஹமட்டின் மேற்பார்வையில் குறித்த அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைவாக, தனியார் காணி ஒன்றில் ஆயுதங்கள் 2➤

## ரத்ன தேரரின் கட்சி உறுப்புரிமை நீக்கம் செல்லாததென உயர் நீதிமன்றம் தீர்ப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரரைக் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கிய எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கட்சி உறுப்புரிமையிலிருந்து தம்மை நீக்கியமைக்கு எதிராக அத்துரலியே ரத்ன தேரர் தாக்கல் செய்த 2➤



## திணறுகின்றது காசா நெருக்கடியில் மக்கள்

### சிறீகாந்தா கண்டனம்

"மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும், ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையில் இப்போது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் போரில், காசா பிரதேசத்தில் வாழும் பலஸ்தீன மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டும் வருகையில், அப்பிரதேசம் தண்ணீர் மற்றும் மின்சாரமின்றி திணறிக் கொண்டிருக்கின்றது." – என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமான என்.சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

"மிக மோசமான மனிதாபிமான நெருக்கடி ஒன்று, காசாவில் ஏற்பட்டிருக்கும் நிலையில், இஸ்ரேல் நாட்டிலும் பொதுமக்களின் உயிரிழப்புக்களும் பாதிப்புக்களும் உயர்ந்து வருகின்றன.

இப்பொழுது நடைபெறுவது இஸ்ரேலின் அரச பயங்கரவாதத்துக்கும், பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய ஹமாஸ் இயக்கத்தின் பயங்கரவாதத்துக்கும் இடையிலான போர் என்பதே உண்மையானது.

இஸ்ரேலுக்குள் ஊடுருவித் தாக்கிய ஹமாஸின் போர் நடவடிக்கையை சாட்டாக வைத்து, அதன் கட்டுப்பாட்டில் உள்ள காசா பிரதேசத்தையே தரைமட்டமாக்கி, இரு துண்டுகளாக அமைந்திருக்கும் பலஸ்தீன மண்ணின் ஒரு துண்டினை ஒட்டுமொத்தமாக விழுங்கிவிடும் இலக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரேலுக்கு, அமெரிக்காவும் மற்றும் மேற்குலக நாடுகள் பலவும் உதவிக் கொண்டிருக்கும் நிலைமையில், உலக அமைதியின் எதிர்காலமே கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

1948 இல் இஸ்ரேலின் தோற்றத்துடன், தமது சொந்த 2➤

## தமிழ் அரசின் முன்னாள் எம்.பி. பொன்.செல்வராசா காலமானார்!

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன். செல்வராசா (வயது 77) சுகயீனம் காரணமாக இன்று காலமானார்.

பட்டிருப்புத் தொகுதியில் பெரியகல்லாற் றைப் பிறப்பிடமாகவும், கோட்டைக் கல்லாற்றை மணவாழ்க்கையாகவும் கொண்ட பொன். செல்வராசா, இலக்கம் 68, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பில் வசித்து வந்தார்.

ஆசிரியராகவும் அதன் பின்னர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் பணியாற்றிய அவர், முதல் தடவையாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் போட்டியிட்டாலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகவில்லை. எனினும், அந்தத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான நிமலன் சௌந்தரநாயகம் ஒரு மாத காலத்துக்குள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அவரின் வெற்றிடத்துக்குப் பொன். செல்வராசா தெரிவு செய்யப்பட்டு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டணி நிறுவப்பட்டது. அதில் பொன். செல்வராசாவின் அர்ப்பணிப்பு அளப்பரியது. அந்தக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 2➤

## திருநெல்வேலியில் சினோபெக் விலைக்கழிவுடன் எரிபொருட்கள்




யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில், சீன நிறுவனமான சினோபெக்கின் எரிபொருட்கள் விலைக்கழிவுடன் வழங்கப்பட்டு வருகின்றமை பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

அங்கு ஒரு லீற்றர் பெற்றோல் 7 ரூபா விலைக்கழிவுடனும், டீசல் 3 ரூபா விலைக் கழிவுடனும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (04)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஏழு பேர் வைத்தியசாலையில்

*கிளிநொச்சி, தருமபுரம் – ஏ 35 பிரதான வீதியில், தருமபுரம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் வீதி ஓரமாக உள்ள பனையுடன் சேரந்த ஆலமரத்தடியில் தொடர்ச்சியாகப் பல தடவைகள் மாணவர்களும் அப்பகுதியால் வரும் பாதசாரிகளும் குளவிக் கொட்டுக்கு இலக்காகிவந்துள்ளனர்.*

*இந்த நிலையில், இன்றைய தினமும் பாடசாலை மாணவர், மாற்றுத்திறனாளி ஒருவர் உட்பட ஏழு பேர் அவ்விடத்தில் குளவிக் கொட்டுக்கிலக்காகி தருமபுர வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்குளவிக் கூடுகளை அகற்றி, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென பாதசாரிகள் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (02)*

## இலங்கைப் பணிப்பெண்ணுக்கு தீவைத்த சவுதி வீட்டு உரிமையாளர்

சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிக்காகச் சென்ற இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவரின் உடலுக்கு அவர் பணிபுரிந்த வீட்டின் உரிமையாளர் தீயிட்டுள்ளார்.

கொத்தடுவ புதிய நகரில் வசித்து வந்த 45 வயதுடைய நயனா தில்ருக்ஷி என்ற பெண்ணே இந்த அசம்பாவிதத்துக்கு முகம் கொடுத்துள்ளார். சுமார் 7 மாதங்களுக்கு முன்பு இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்தை எதிர்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவில் உள்ள மருத்துவமனையில் பல மாதங்களாகத் தான் சிகிச்சை பெற்று வந்ததாகவும், பின்னர் சவுதிப் பொலிஸாரின் தலையீட்டில், தடுப்பு மையத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது கடும் சிரமங்களுக்கு மத்தியில் சுமார் ஒன்றரை மாதங்களாகத் தடுப்பு முகாமில் வசித்து வருவதால், தம்மை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி வீட்டு உரிமையாளர், அவரது மனைவி, பிள்ளைகளுக்குச் சரியாகச் சாப்பாடு கொடுக்கவில்லை எனக் கூறித் தன்னைத் தாக்கியதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் தனது உடலில் பெட்ரோலை ஊற்றி தீ வைத்துள்ளதாகவும், பின்னர் தீயை அணைத்து, அம்புலன்ஸை வரவழைத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நயனா தில்ருக்ஷியே தனது உடலுக்குத் தீ வைத்ததாக அந்த வீட்டின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது. (04)

## திணறுகின்றது காசா ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலஸ்தீன மண்ணிலிருந்து வேட்டையாடி விரட்டப்பட்ட பலஸ்தீன மக்களின் நீதிக்கான நீண்ட போராட்டத்தில், 1993இல் அன்றைய அமெரிக்க ஜனாதிபதியில் கிளின்ரனின் மத்தியஸ்தத்துடன், இஸ்ரேலிய பிரதமர் யிற்சாக் றபினுக்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசிர் அரபாத்துக்கும் இடையில் கையெழுத்தான சமாதான ஒப்பந்தம், பலஸ்தீன மண்ணில், யூதர்களுக்கு இஸ்ரேலும், பலஸ்தீனிய அரபுக்களுக்கு பலஸ்தீனமும் என இரண்டு நாடுகள் அருகருகாக அமைவதற்கு வழிகாட்டி, ஓர் வரலாற்று ஆச்சரியத்தையே நிகழ்த்தியிருந்தது.

ஆனால், படுகொலை செய்யப்பட்ட பிரதமர் யிற்சாக் றபினுக்குப் பிறகு, ஆட்சி அதிகாரத்திற்கு வந்த இஸ்ரேலிய தலைவர்களின் நடவடிக்கைகளால், அந்த சமாதான ஒப்பந்தம் செயல் இழந்து போனதால் ஏற்பட்ட மோதல் சூழ்நிலையின் உச்சக்கட்டமே, இப்போது நடைபெறும் போராகும்.

இந்தப் போரில் தலையிட்டு, போர் நிறுத்தம் ஒன்றினை சாதிக்கும் வல்லமை கொண்டுள்ள நாடுகள் எல்லாம், இஸ்ரேலின் பக்கமே இப்போது சாய்ந்து நிற்கின்றன.

அனைத்து வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி! அமைச்சு வெளியிட்ட தகவல்

மத்திய கிழக்கின் இன்றைய நிலைமை, 14 வருடங்களுக்கு முன்னர், எமது இலங்கைத் தீவில், வன்னிப் பிரதேசத்தில் அரங்கேற்றப்பட்ட மனித அவலத்தையே ஞாபகப்படுத்துகின்றது.

அரசியல் நீதி கோரி நிற்கும் இலங்கைத் தமிழ் மக்கள், தம்மைப் போலவே, ஏகாதிபத்திய சக்திகளால் வஞ்சிக்கப்பட்ட பலஸ்தீன மக்களோடு உணர்வுகளால் ஒன்றி நிற்கின்றனர் என்பதை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய நேரம் இதுவாகும். இது தமிழ்த் தேசிய அமைப்பக்கள் அனைத்தினதும் கட்டாயக் கடமையும் கூட." - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## தமிழ் அரசின் முன்னாள் எம்.பி. .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

2010ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சின் மூத்த துணைத் தலைவராகவும், மத்திய குழு, அரசியல் குழு ஆகிய வற்றில் உறுப்பினராகவும் அவர் அங்கம் வகித்தார்.

அவரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலக்கம் 68, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரத்ன தேரரின் கட்சி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனு மீதான தீர்ப்பை ஜனக் டி சில்வா மற்றும் மூர்து பெர்னாண்டோ ஆகிய நீதியரசர்களின் இணக்கப்பாட்டுடன், நீதியரசர் புவனேக அலுவிஹாரே வழங்கியுள்ளார்.

எங்கள் மக்கள் சக்திக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழு 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வெளியிட்ட கடிதம் மூலம், அதுரலியே ரத்ன தேரரின் கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிராக அத்துரலியே ரத்ன தேரர், மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்த நிலையில், உயர் நீதிமன்றம், கட்சியின் தீர்மானம் சட்டத்திற்கு முரணானது எனத் தீர்ப்பளித்துள்ளது. (04)

## புலிகளின் ஆயுதங்களையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தங்கம் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மூன்று இடங்களில் இந்த அகழ்வுப்பணிகள் இடம்பெற்றன.

வவுனியா நீதவான் நீதிமன்ற உத்தரவின்பேரில், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டுச் செயலிழப்புப் பிரிவு, பொலிஸ் குற்றத்தடுப்பு விசாரணை ஆய்வக அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பூவரசங்குளம் பொலிஸார் இணைந்து குறித்த அகழ்வுப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

இரண்டு பெகோ இயந்திரங்களின் உதவியுடன் பல மணித்தியாலங்கள் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும், ஆயுதங்களோ தங்கமோ கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, தற்போது தோண்டப்பட்ட இடங்களை மீண்டும் மூடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாஸ் அடிப்படையில் அனுமதி வழங்கப் போவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், ஒரு துளியேனும் இந்திய மீனவர்களுக்கு அனுமதியில்லை என்று மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். ஆனாலும், அத்துமீறிய மீன்பிடி இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?, என்று அவர் கேள்வியெழுப்பினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் இழுவைப்படகு இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது அவருக்கு மாதமொன்றுக்கு 20,000 ரூபாய் இலஞ்சம் கொடுப்பதாகவும் நாடாளுமன்றத்திலே ஒரு உறுப்பினர் சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்த விடயங்களெல்லாம் ஒருபுறம் இருக்க, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை மீன்பிடி அமைச்சராக நியமித்ததற்கான காரணமே வடக்குக் கிழக்கிலே இருக்கும் தமிழர்களுக்கும் தென்னிந்தியாவில் இருக்கும் தமிழர்களுக்கும் முரண்பாடு வரவேண்டும் என்பதற்காகத்தான்.

தமிழக முதலமைச்சருக்கும், அரசியல்வாதிகளுக்கும் இலங்கையில் வடக்குக் கிழக்கிலே வாழும் தமிழ் மக்கள் மீது விரோதச் சிந்தனை வரவேண்டும் என்பதற்காகவே, திட்டமிட்ட வகையிலே, டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்பது நான் அடிக்கடி சொல்லும் விடயம்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உண்மையிலேயே வாயால் சொல்வது ஒன்று நடைமுறைப்படுத்துவது ஒன்று, என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குறிப்பிட்டார். (04)

## பொது முடக்க அறிவிப்பை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது முடக்கத்தால் மகிழ்ச்சியடையக் கூடியவர்கள் நாளாந்தம் உழைக்காமல் மாதம்தோறும் வங்கியில் சம்பளத்தைக் குறைவின்றிப் பெறுகின்ற அரச ஊழியர்கள், பொது நிறுவன ஊழியர்கள். அவர்களுள்ளும் கடமை உணர்வாளர் முடங்க விரும்பார். ஈழத் தமிழர் தாயகத்தில் அவர்களின் தொகை 3 இலட்சமே.

ஈழத் தமிழர் தாயகத்தின் பெருவணிகர் தொகை 25 ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரம் வரை. பொது முடக்கத்தால் இவர்களுக்கு இழப்புக் கணிசமாகும். எனினும், அந்த இழப்பைத் தாங்கும் வலிமை அவர்களுக்குப் பெருமளவு உண்டு.

பயண முன்பதிவுடன் காத்திருக்கும் நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வாய்ப்புகளை எதிர்நோக்கும் இளைஞர் யாவரையும் பொது முடக்கம் கடுமையான உளைச்சலுக்கு உள்ளாக்கும்.

பொது முடக்கத்துக்கு அழைத்த குபேரர்களான அரசியல்வாதிகளே, போராட்டங்களால் தொடர்ச்சியாகப் பொருள் இழந்து, ஊக்கம் இழந்து, மெது மெதுவாக மீண்டு, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர் தாயகத்தின் ஏழைகளான 8 இலட்சம் குடும்பத் தலைவர்கள் மீது, சார்ந்த பொது மக்கள் மீது பொருளாதாரச் சுமையை ஏற்றாதீர்கள்.

மனிதச் சங்கிலிப் போராட்டத்துக்கு அழைத்தீர்கள். மக்கள் வரவில்லை என்ற குறை உங்களுக்கு. உங்கள் போராட்டம் ஈழத் தமிழர் தாயகம் முழுவதுமாக அமையவில்லை.

மருதனாமடத்தில் போராடினால் முசலியில் உணர்வு ஏறுமா? கொக்குவிலில் போராடினால் கல்முனையில் உணர்வு பீறிடுமா? குளப்பிட்டிச் சந்தியில் மண்டியிட்டால் கொக்கட்டிச்சோலையில் உணர்வு குமுறுமா?

25 ஆயிரம் சதுர கிலோமீற்றர் நீண்டு அகன்ற தமிழர் தாயகத்தை 5, 6 சதுர கிலோமீற்றர் பரப்புக்குள் முடக்க முயலாதீர்கள். பிரதேச வாதத்தைத் தூண்டாதீர்கள். யாழ்ப்பாணிகள் ஆட்சி எங்களுக்கு வேண்டாம், என ஏனைய பிரதேசத்தவர் கூறும் நிலைக்குத் தள்ளாதீர்கள்.

போராட்டத்துக்கு உரிய காரணங்கள் உள்ளன. மனித நாகரிக வரலாறே போராட்டத்தின் பெறுபேறு. போராட்டம் இல்லாமல் வாழ்க்கை இல்லை.

இன்றைய மறுவாழ்வுச் சூழ்நிலையில், தோல்வியால் முடங்கிய விடுதலை உணர்வுகளையும் தோல்வியால் இழந்த தற்சார்புப் பொருளாதாரத்தையும் மீட்டெடுக்கும் நிலையில், பொது முடக்கம் போராட்டமாகாது. இயல்பு வாழ்க்கையைக் குழப்புவது போராட்டமாகாது. பொருளாதாரத்தை வீழ்த்துவது போராட்டமாகாது.

பொது முடக்கத்தைக் கோராமல் போராட்ட உத்திகளை மாற்றுங்கள். இயல்பு வாழ்க்கையைக் குழப்பாமல், மீள் வளர்ச்சியை வீழ்த்தாமல் போராட்ட உத்திகளைத் தீர்மானியுங்கள்.

ஈழத் தமிழர் தாயகத்தின் மரபுகளை மீட்டெடுக்கும் போராட்டத்தைக் கடந்த ஆறு ஆண்டுகளாகச் சிவசேனையினர் நிகழ்த்தி வருகிறோம். ஈழத் தமிழர் தாயகம் எங்கும் போராட்டங்களை நடத்தி வருகிறோம்.

ஒவ்வொரு போராட்டத்திலும் சிவசேனையினர் வெற்றி அடைந்திருக்கின்றோம். எந்த ஒரு போராட்டத்திலும் மக்களின் இயல்பு வாழ்க்கை குழம்பவில்லை. எந்தவொரு போராட்டத்திலும் எவரும் கைதாகவில்லை. அவ்வாறே நாங்கள் போராட்ட உத்திகளை வகுத்தோம், வெற்றியடைந்து வருகின்றோம்.

தோல்வியடைந்த சமூகம் நாங்கள். அடிமைகளாக வாழும் சமூகம் நாங்கள். இழப்புகளைக் கடுமையாகச் சந்தித்த சமூகம் நாங்கள். குபேரர்களான அரசியல் வாதிகளே, கஞ்சி குடிக்கும் மக்களைக் கவனத்தில் கொள்ளுங்கள். அரசியல் அடிமைகளாக உள்ள அவர்கள், பொருளாதார அடிமைகளாகத் தொடர முடியாது. பொது முடக்க அறிவிப்பை மீளப் பெறுங்கள் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# தனக்காக வாழாது தன் இனத்தின் விடிவுக்காய் வாழ்ந்தவர் பொன்.செல்வராசா - அனுதாபச் செய்தியில் ஜெயசிறில்



(வி.ரி.சகாதேவராஜா)

தனக்காக வாழாது தன் இனத்தின் விடிவுகாய் இது வரையும் செயற்பட்டு, ஈழத்தின் ஏக்கத்தோடு இன்று உங்கள் மூச்சு ஓய்ந்து விட்டது ஐயா. ஆழ்ந்த அனு தாபங்கள், என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவுக் கிளைத் தலைவரும் காரைதீவுப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான பொன்.செல்வராசா நேற்று உடல் சுகயீனம் காரணமாக இறைவனடி சேர்ந்தார்.

அவரது மறைவு தொடர்பாக கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில்,

எமது அம்பாறை மாவட்டத்தின் பல செயற்பாடு களையும், செயல் திட்டங்களையும் முன்னெடுத்த அக்கறை மிகுந்த ஒருவர். உரத்த குரலில் எதிரியைப் பதறவைத்த குரல் ஓய்ந்தது.

இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும். எதிர் காலத்தில் பல இளைஞர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு, வீர மண்ணின் விடுதலைக் காய் இறுதி வரை செயல்பட்டவர்.

தமிழ்த் தேசியத்தின் பாசறையில் வெற்றிபெற உழைத்தவர்.

தனக்காக வாழாது தன் இனத்தின் விடிவுக்காய் இதுவரையும் செயல்பட்டவரே, ஈழத்தின் ஏக்கத்தோடு இன்று உங்கள் மூச்சி ஓய்ந்து விட்டது ஐயா.

தமிழர் தாயகம் தமிழர்களுடைய கையை மீறிப் போகக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு விடயமாக ஆலோசனை வழங்கிய ஒருவர். அவரது கருத்துக் கள் எப்போதுமே பொன்னானதாகவே இருக்கும். ஆயுத முனைக்கும் அடக்குமுறைக்கும் அடிபணியாது செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்ற ஓர் இளைஞனைப் போன்று செயல்படும் ஒரு சிறந்த வீரர். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன், என்று தெரிவித்துள்ளார்.

# கல்முனை பற்றிமாவில் ஆசிரியர் தின விழா



(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் சர்வ தேச ஆசிரியர் தின விழா இன்று கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் நடைபெற் றது.

அதிதிகளும், கூடவே ஆசிரியர்களும் அவர்களது புதிய வர்ண சீருடையுடன் மாலை சூட்டி வரவேற் கப்பட்டார்கள். பின்னர் மேடை நிகழ்ச்சிகள் மேடை ஏறின.

கல்முனை வலயக் கணக்காளர் ஹபிபுல்லா சிறப் புச் சொற்பொழிவை ஆற்றினார். ஆசிரியர்கள் பாராட் டிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

இம்முறை கராத்தே போட்டியில் தேசிய ரீதியில் வெண்கலப்பதக்கம் பெற்ற மாணவன் கேதீஸ்வரன் ரோஹித்தும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதோடு, பயிற்றுவிப்பாளர்களும் பாராட்டப்பட்டார்கள்.

ஆசிரியர்களின் கலைநிகழ்ச்சிகளும் மேடை யேறியிருந்தன.




# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தொலைக்காட்சி, தளபாடங்கள் வழங்கல்

கிளிநொச்சி வடக்கு வலையத்துக்கு உட்பட்ட இராம நாதபுரம் கிழக்கு மகா வித்தியாலயம், தருமபுரம் மத்திய கல்லூரி, முருகானந்தா கல்லூரி, பரந்தன் இந்து மகா வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளில் விசேட கல்வித் திட்டத்தில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக அவர் களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்றைய தினம் கிளிநொச்சி வடக்கு வலையக் கல்விப் பணிப்பாளர் சிவனருள்ராஜா மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர், விசேடகல்விப் பணிப்பாளர் இ. ஜெயகரன் ஆகியோரின் வழிநடத்தலில் சுமார் எட்டு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தளபாடங்க ளும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு தருமபுரம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (02)



# இஸ்ரேலில் சிக்கிய 254 நேபாள மாணவர்கள் நாடு திரும்பினர்



இஸ்ரேலில் சிக்கித் தவித்த 254 நேபாள மாணவர்களை ஏற்றிக் கொண்டு முதல் மீட்பு விமானம் காட்மண்ட்டைச் சென்றடைந்துள்ளது.

காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் குழுவினர் கடந்த சனிக்கிழமை ஆயிரக்கணக்கான ராக்கெட்டுகளை சரமாரியாக வீசித் தாக்குதல் நடத்தினர்.

அத்துடன், இஸ்ரேலுக்குள் நிலம், கடல், வான் வழியாக 22 இடங்களில் ஊடுருவிய சுமார் 1,000 ஹமாஸ் அமைப்பினர், சுமார் 25 கிலோமீற்றர் வரை உள்ளே நுழைந்து பொதுமக்களையும் ராணுவத்தினரையும் சுட்டுக் கொன்றதாவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தவிர இஸ்ரேல் ராணுவத்தினர், உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்டோரை ஹமாஸ் படையினர் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இல்லாத அளவுக்கு தங்கள் நாட்டுக்குள் ஹமாஸ் நடத்திய இந்தக் கொடூரத் தாக்குதலுக்குப் பதிலடியாக, கடந்த 6 நாள்களாக காஸா முழுவதும் இஸ்ரேல் ராணுவம் தீவிரமான வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், நேபாள அரசு இஸ்ரேலில் இருந்து தனது நாட்டு மாணவர்களைத் திரும்ப அழைத்து வருவதற்கான கூடுதல் ஏற்பாடுகளைச் செய்வதாக அறிவித்தது.

அதன்படி, இஸ்ரேலில் சிக்கித் தவித்த மாணவர்களை அழைத்து வருவதற்காக வியாழக்கிழமை காலை டெல் அவிவ் நகருக்குச் சென்ற முதல் மீட்பு நேபாள எயார்லைன்ஸ் விமானம், 254 மாணவர்களை ஏற்றிக்கொண்டு இன்று அதிகாலை 3 மணியளவில் காட்மண்டுவில் தரையிறங்கியது.

அதே நேரத்தில் 249 பேர் இன்னும் விமானத் திற்காக இஸ்ரேலில் காத்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

டெல் அவிவில் உள்ள நேபாளத் தூதரகம், நாடு திரும்பாது இஸ்ரேலிலேயே பாதுகாப்பான பகுதிகளில் தங்க விரும்புபவர்கள் மற்றும் நேபாளத்திற்குத் திரும்ப விரும்புபவர்களின் விவரங்களைப் பதிவு செய்துள்ளது.

இதுவரை மொத்தம் 557 நேபாள மக்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 503 பேர் நேபாளம் திரும்ப விருப்பம் தெரிவித்திருந்தனர். அவர்களில் 254 மாணவர்கள் முதல் கட்டமாக காட்மாண்ட் சென்றுள்ளனர்.

“தற்போது டெல் அவிவில் தினசரி வர்த்தக விமானங்கள் சேவையைத் தொடங்குகின்றன. இதில், தேவையின் அடிப்படையில், மாணவர்கள் நேபாளம் திரும்புவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்” என்று அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியுள்ளார். (04)



## இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் உயிரிழப்பு 4,200ஐக் கடந்தது!

கடந்த சனிக்கிழமையிலிருந்து இஸ்ரேலுக்கும், ஹமாஸ் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களுக்கும் இடையிலான மோதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று வியாழக்கிழமை 4,200 ஐக் கடந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தங்கள் நாட்டில் ஹமாஸ் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,300 ஐக் கடந்ததாக இஸ்ரேல் கூறியுள்ளது. உயிரிழந்தவர்களில் 447 சிறுவர்களும், 248 பெண்களும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் வான் வழித் தாக்குதலில் இதுவரை 1,417 பேர் உயிரிழந்ததாக அந்தப் பிராந்திய சுகாதாரத் துறை அமைச்சகம் கூறியது.

அத்துடன், இஸ்ரேல் தாக்குதல் காரணமாக மேற்குக் கரையில் 28 பேரும், லெபனானில் 6 பேரும் கொல்லப்பட்டனர் என்றும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தவிர, தங்கள் எல்லைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திய 1,500 ஹமாஸ் படையினர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் ஏற்கெனவே தெரிவித்திருந்தது. (04)

## பிணைக் கைதிகள் விடுவிக்கப்படும் வரை காஸாவில் கடும் முற்றுகை தொடரும்!

ஹமாஸ் படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட பிணைக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படும் வரை காஸா பகுதிக்கு குடிநீர், உணவு, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் கொண்டு செல்வதை தடுக்கும் முழு முற்றுகை தொடரும், என்று இஸ்ரேல் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதி மருத்துவமனைகள் மின்சாரமில்லாமல் சவக்கிடங்குகளாக மாறுவதைத் தவிர்க்கும் வகையில், காஸாவுக்குள் எரிபொருளை மட்டும் உடனடியாக அனுமதிக்க வேண்டும், என்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து, இஸ்ரேல் இவ்வாறு பதில் கூறியுள்ளது.

இது குறித்து அந்த நாட்டின் எரிசக்தித் துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவிக்கையில், காஸாவுக்கு நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஹமாஸ் படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட அனைத்துப் பிணைக் கைதிகளும் இஸ்ரேலுக்குத் திரும்ப வரும்வரை காஸாவுக்கு மின்சாரம் அளிக்கப்படாது.

அவர்களாக மின்சாரம் உற்பத்தி செய்துகொள்வதற்கு வாய்ப்பு வழங்கும் வகையிலும் ஒரு எரிபொருள் லொறியும் அந்தப் பகுதிக்குள் நுழையாது.

மனிதாபிமானத்தால்தான் மனிதாபிமானத்தைப் பெற முடியும். இந்த விவகாரத்தில் எங்களுக்கு யாரும் பாடம் எடுக்கத் தேவையில்லை, என்றார்.

தங்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் கடந்த 2005 ஆம் ஆண்டு வெளியேறியது. அதன் பிறகு அந்தப் பகுதியின் ஆட்சியைக் கைப்பற்றிய ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் ரொக்கெட் தாக்குதல் நடத்துவது, அதற்குப் பதிலடியாக காஸாவில் ஹமாஸ் நிலைகள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்துவது என்று பல ஆண்டுகளாக அங்கு பதற்றம் நீடித்து வருகிறது.

இந்தச் சூழலில், காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் குழுவினர் கடந்த சனிக்கிழமை நடத்திய கொடூரத் தாக்குதலுக்குப் பதிலடியாக, கடந்த 6 நாள்களாக காஸா முழுவதும் இஸ்ரேல் ராணுவம் தீவிர வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

மேலும், மக்கள் மிக நெருக்கமாக வசிக்கும் அந்த மிகச் சிறிய பகுதிக்கு மின்சார விநியோகத்தைத் துண்டித்த இஸ்ரேல் அரசு, உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாத வகையில் அந்தப் பகுதியை முற்றுகையிட்டுள்ளது.

ஏற்கெனவே, இஸ்ரேலின் கடுமையான விமானத் தாக்குதலால் காஸாவின் பல்வேறு பகுதிகள் தரை மட்டமாகி வருகின்றன. இந்தத் தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சூழலில், காஸாவின் ஒரே மின் நிலையத்தில் எரிபொருள் தீர்ந்துபோனதால் அதன் இயக்கம் புதன்கிழமை நிறுத்தப்பட்டது. அதையடுத்து, காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளித்து வரும் மருத்துவமனைகள் உள்ளிட்ட பகுதிகளுக்கு இன்றியமையாத மின்சாரம் கிடைப்பது கேள்விக்குறியாகியுள்ளது.

இந்த நிலையில், கஸாவில் பணியாற்றி வரும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் பிராந்திய இயக்குநர் ஃபேப்ரிஸியோ கார்போனி வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘மின்சாரம் இல்லாவிட்டால் காஸாவிலுள்ள மருத்துவமனைகள் அனைத்தும் சவக் கிடங்காகிவிடும். எனவே, மனிதாபிமான அடிப்படையில் காஸாவுக்குள் எரிபொருளை இஸ்ரேல் அரசு அனுமதிக்க வேண்டும்’ என்று கோரினார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே இஸ்ரேல் எரிசக்தித் துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் மேற்கண்டவாறு திட்டவட்டமாகக் கூறியுள்ளார். (04)

## சிரிய விமான நிலையங்கள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்!

சிரியாவின் டமஸ்கஸ், அலெப்போ நகரங்களின் விமான நிலையங்கள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியதாக சிரியா அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

சிரியாவின் டமஸ்கஸ், அலெப்போ நகர விமான நிலையங்கள் மீது இஸ்ரேல் வியாழக்கிழமை வான் வழித் தாக்குதல் நடத்தியதாக சிரிய அரச ஊடகம் தெரிவித்துள்ளது. ஹமாஸ் ஆயுதக் குழு இஸ்ரேலில் தாக்குதல் நடத்தத் தொடங்கிய பின்னர், சிரியா மீது இஸ்ரேல் நடத்தும் முதல் தாக்குதல் இதுவாகும்.

ஈரான் வெளியுறவு அமைச்சர் சிரியாவுக்கு செல்லவுள்ள நிலையில் இந்த வான்வழித் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியுள்ளது. இருப்பினும் இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் அதிகாரபூர்வமாக தகவல் தெரிவிக்கவில்லை.

லெபனானின் ஹிஸ்புல்லா உள்ளிட்ட ஆயுதக் குழுக்களுக்கு ஈரானிலிருந்து ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுவதைத் தடுக்கும் வகையில், சிரியாவில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள விமான நிலையங்கள், துறைமுகங்களைக் குறிவைத்து இஸ்ரேல் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்னையில் ஹமாஸ் அமைப்புக்கு சிரியா ஆதரவு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (04)

# சப்ரகமுவ பல்கலை கணினிப்பீட முதலாவது பீடாதிபதி பேராசிரியர் எஸ்.வசந்தப்பிரியனுக்கு கல்வியாளர் விருது!



இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகக் கணினிப் பீடத்தின் முதலாவது பீடாதிபதியாகப் பணியாற்றும் பேராசிரியர் ச.வசந்தப்பிரியனுக்கு CSSL ICT கல்வியாளர் 2022 விருதினை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 11ஆம் திகதி சங்கிரிலா ஹோட்டலில் வழங்கி கௌரவித்தார்.

இலங்கையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) அறிவையும் அத்துறைக் கல்வியின் வளர்ச்சியையும் வழங்குவதில் குறிப்பிடத்தக்க தேசியப் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக இந்த விருது பேராசிரியர் ச.வசந்தப்பிரியனுக்கு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் – சுன்னாகத்தைப் பிறப்பிட மாகக் கொண்ட பேராசிரியர் ச.வசந்தப்பிரியன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 97ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவில் கல்வி கற்றவர்.

இவர் தனது கலாநிதிப் பட்டத்தை சீனாவின் வுஹான் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திலும், முதுகலை அறிவியல் பட்டத்தை எய்ந்தோவன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திலும், கணினி விஞ்ஞானத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தை பேராதனை பல்கலைக்கழகழகத்திலும் பெற்றார்.

2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதல் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய பேராசிரியர் ச. வசந்தப்பிரியன், இளம் வயதில் கணினிப் பேராசிரியராக உயர்வடைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கிழக்கு முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி மாகாணப் பணிப்பாளராக நௌபீஸ் நியமனம்!



(கே.எ.ஹமீட்)

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளராகச் செயற்பட்டு வந்த என்.எம்.நௌபீஸ், கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிப் பிரிவின் மாகாணப் பணிப்பாளராக, ஆளுநர் செந்தில் தொண்டமானினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்காவினால்அவருக்கான நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டது. பிரதம செயலாளர் காரியாலயத்தில் இக்கடிதம் வழங்கி வைக்கப்பட்டபோது, கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயகவும் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# வாய்ப் புற்றுநோயின் அறிகுறிகளை கண்டறிதலும் தடுத்தலும் செயலமர்வு



(நூருல் ஹுதா உமர்)

சுகாதார அமைச்சின் தேசியப் புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ், வாய்ப் புற்றுநோயின் முன் அறிகுறிகளைக் கண்டறிதலும் வாய்ப் புற்றுநோயினை தடுத்தலும் - எனும் தொனிப்பொருளில் கல்முனை பிராந்திய வாய்ச் சுகாதாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், பிராந்திய வாய்ச் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம்.சரூக்கினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நிகழ்வு, பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிகள், மாவட்ட மற்றும் பிரதேச வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், பல் மருத்துவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிச் செயலமர்வில், அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலை வாய், தாடை, முக சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் டிலான் பெர்னான்டோ பிரதம வளவாளராக்க் கலந்துகொண்டு விரிவுரை நிகழ்த்தினார்.

இதன்போது, நோயாளிகளை நேரடியாகப் பரிசோதனை செய்துததுடன் செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# 5 நாட்டினருக்கு வீசாக் கட்டணங்கள் இனி இல்லை யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

5 நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளிடம் வீசா கட்டணத்தை அறவிட வேண்டாம், என்ற யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்தவகையில், சீனா, ரஷ்யா, இந்தியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கே இவ்வாறு வீசாக் கட்டணம் விலக்களிக்கப்படவுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் கடந்த மாதத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 938 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த ஆண்டில் நாட்டிற்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 10 இலட்சத்தைக் கடந்துள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.10.2023இல் வெளியிடப்பெற்றது.